# وَصِيَّتِي

# வஸிய்யத்தீ

எனது

# மரண சாசனம்


ஆசிரியர்

**நாஸிர் அல்உனைஸான்**

தமிழில்

**உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்**



إن هدى الله هو الهدى

دار الهدى

DARUL HUDA

(இவ்வாறாகிய) அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

ABOUT THIS BOOK

Name of the Book : **WASIYYATHEE**

Author : Sheikh **Naasir Al-Unaisaan**

Translator : Mufti **A. Omar Sheriff** Qasimi,

Proof Reader Aalim **Kaja Mohaideen** Rabbani
Aalim **Abdul Qadir** Rabbani,

Language : Tamil

Edition : 1st Edition (March 2017)

Copies : 3000

Total Pages : 48

Published by :

**DARUL HUDA**
The Quality Islamic Book Publisher
New No. 211, First Floor, Linghi St,
Mannady, Che-1.
Phone: 044-25247866, 98401 74121
Email: darulhuda.chennai@gmail.com
www.darulhuda.net

# பதிப்புரை

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

**(பாவங்களை விட்டு) தப்பிக்க முடியாது,**
**(நன்மைகள் செய்ய) ஆற்றல் பெற முடியாது**
**அல்லாஹ்வைக் கொண்டே தவிர!!**

# முன்னுரை

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

كُتِبَ عَلَيْكُمْ إِذَا حَضَرَ أَحَدَكُمُ الْمَوْتُ إِنْ تَرَكَ خَيْرًا الْوَصِيَّةُ لِلْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ بِالْمَعْرُوفِ حَقًّا عَلَى الْمُتَّقِينَ

வஸிய்யத் - மரண சாசனம் உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. அதாவது, உங்களில் ஒருவருக்கு மரணம் சமீபித்தால் அவர் செல்வத்தை விட்டுச் சென்றால் பெற்றோருக்கும் நெருங்கிய உறவுகளுக்கும் அவர் மரண சாசனம் செய்ய வேண்டும். இறையச்சமுள்ளவர்கள் மீது இது மிக கட்டாயமாகும். (அல்குர்ஆன் 2:180)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا شَهَادَةُ بَيْنِكُمْ إِذَا حَضَرَ أَحَدَكُمُ الْمَوْتُ حِينَ الْوَصِيَّةِ اثْنَانِ ذَوَا عَدْلٍ مِنْكُمْ أَوْ آخَرَانِ مِنْ غَيْرِكُمْ

விசுவாசிகளே! உங்களில் ஒருவருக்கு மரணம் சமீபித்து அவர் மரண சாசனம் செய்யும் நேரத்தில் உங்களுக்கு மத்தியில் சாட்சியாவது உங்களில் உள்ள இரு நீதவான்கள் அங்கு இருப்பதாகும். (அல்குர்ஆன் (5:166)

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللّٰهِ صَلى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَا حَقُّ امْرِئٍ مُسْلِمٍ لَهُ شَيْءٌ يُوصِي فِيهِ يَبِيتُ لَيْلَتَيْنِ إِلَّا وَوَصِيَّتُهُ مَكْتُوبَةٌ عِنْدَهُ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்: தான் வஸிய்யத் - மரண சாசனம் கூறும்படி தன்னிடம் ஏதும் பொருள் இருக்கின்ற நிலையில் ஒரு முஸ்லிம் இரண்டு இரவுகள் கழிப்பது கூடாது அவரின் மரண சாசனம் அவரிடம் எழுதப்பட்டதாக இருந்தே தவிர.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு | நூல் : ஸஹீஹுல் புகாரி | எண் : 2738

மேற்கண்ட இறை வசனங்களும் நபிமொழியும் உணர்த்துவதாவது: மரண சாசனம் செய்கின்ற அளவுக்கு ஏதும் பொருள் வைத்திருக்கின்ற எல்லா முஸ்லிம்களும் மரண சாசனம் செய்வது ஒரு கட்டாயமான சுன்னாவாகும். இதன் மூலமாக பிறரின் உரிமைகள் பாழாகுவதில் இருந்தும் அல்லது மறுக்கப்படுவதில் இருந்தும் பாதுகாக்கப்படுகின்றன.

மரண சாசனம் கூறுபவர் தனது மரண சாசனத்தில் கடன்களுக்கும் மக்களின் உரிமைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிப்பது மிக அவசியமாகும். அப்படி ஏதும் கடன் அல்லது பிறர் சம்பந்தமான உரிமைகள் அவர் பொறுப்பில் இருந்தால் மரண சாசனம் செய்வது வாஜிப் - கட்டாயம் ஆகும்.

வஸிய்யத் செய்வதற்கு தன்னிடம் ஏதும் இல்லை என்றாலும் குறைந்த பட்சம் அல்லாஹ்வை அஞ்ச வேண்டும், அவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றாவது ஒரு முஸ்லிம் தனது வாரிசுகளுக்கு வஸிய்யத் செய்வது முஸ்தஹப் - விரும்பத்தக்க செயலாகும். இந்த உம்மத்தின் அறிஞர் பெருமக்கள் இவ்வாறுதான் தீர்ப்பு

கூறியுள்ளார்கள். அறிஞர் அப்துல் அஸீ ஸ் இப்னு பாஸ் அவர்களும் இப்படித்தான் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

வஸிய்யத் செய்பவர் தனது வஸிய்யத்தில் கவனிக்க வேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய மார்க்க சம்பந்தமான விஷயங்களை இந்த சுருக்கமான ஏட்டில் உமக்கு முன் நாங்கள் வைக்கிறோம். இதன் மூலம் அவர் செய்கின்ற வஸிய்யத் மார்க்கம் வரையறுத்துள்ள வஸிய்யத்திற்கு ஏற்ப ஒரு நிறைவானதாக அமையும்.

இந்த முறையான வழிமுறைகளை நன்கு கவனித்து வாசித்து அதில் கூறப்பட்டுள்ள விவரங்களை முழுமைப்படுத்தி தன்னிடம் எப்போதும் வைத்துக்கொண்டால் இந்த மகத்தான சுன்னத்தை நீர் நிறைவேற்றியவராக ஆகிவிடுவீர். இன்று பெரும்பாலான மக்கள் இந்த சுன்னத்தை மறந்துவிட்டனர்.

----------------

# وَصِيَّتِي

# வஸிய்யத்தீ

## எனது மரண சாசனம்!!

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை அறவே இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

வஸிய்யத் - மரண சாசனம் செய்வதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள்.

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللّٰهِ صَلى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَا حَقُّ امْرِئٍ مُسْلِمٍ لَهُ شَيْءٌ يُوصي فِيهِ يَبِيتُ لَيْلَتَيْنِ إِلَّا وَوَصِيَّتُهُ مَكْتُوبَةٌ عِنْدَهُ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்: தான் வஸிய்யத் - மரண சாசனம் கூறும்படி தன்னிடம் ஏதும் பொருள் இருக்கின்ற நிலையில் ஒரு

முஸ்லிம் இரண்டு இரவுகள் கழிப்பது கூடாது அவரின் மரண சாசனம் அவரிடம் எழுதப்பட்டதாக இருந்தே தவிர.
அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு | நூல் : ஸஹீஹுல் புகாரி | எண் : 2738

ஆகவே, இதுதான் எனது வஸிய்யத் ஆகும். கீழ்க்காணுகின்ற விஷயங்களை நான் இதில் ஒப்புக்கொள்கிறேன்.

முதலாவதாக, எல்லாவற்றுக்கும் முன்பாக, ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிமுறைக்கு மாற்றமான சொல், செயல்கள் அனைத்தை விட்டும் நான் அல்லாஹ்வின் பக்கம் விலகி விடுகிறேன்.

**يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ**

அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கையாளர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தார்களையும் நரகத்தை விட்டு பாதுகாத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மக்களும் கற்களும் ஆகும். அவற்றின் மீது முரடர்களான கடுமையானவர்களான வானவர்கள் இருப்பார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதற்கு அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள். அவர்கள் எதற்கு ஏவப்பட்டார்களோ அதையே செய்வார்கள். (அல்குர்ஆன் 66:6)

ஆகவே, ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தோழர்கள் இவ்வாறுதான்

வஸிய்யத் செய்துள்ளார்கள். இது குறித்து அவர்கள் மூலம் பல அறிவிப்புகள் வந்துள்ளன.

عَنْ حُذَيْفَةَ بْنِ اليَمَانِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ إِذَا مِتُّ فَلاَ تُؤْذِنُوا بِي إِنِّي أَخَافُ أَنْ يَكُونَ نَعْيًا فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَنْهَى عَنِ النَّعْيِ

ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு வஸிய்யத் செய்ததாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது.

“நான் இறந்துவிட்டால் ஒருவருக்கும் என் இறப்பைப் பற்றி அறிவிக்காதீர்கள். அது நஃயி ஆகிவிடும் என்று நான் பயப்படுகின்றேன். ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “நஃயி”யை விட்டும் தடுப்பதை நான் செவியுற்றுள்ளேன்.

* நஃயி என்றால் மரண அறிவிப்பு செய்தல்.

அறிவிப்பாளர்: பிலால் இப்னு யஹ்யா ரஹிமஹுல்லாஹ் | நூல்: சுனன் அத்திர்மிதி | எண்: 986

இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது “அல்அத்கார்” நூலில் கூறியுள்ளார்கள்: “ஜனாஸா விஷயத்தில் வழக்கத்தில் உள்ள எல்லா விதமான அனாச்சாரங்களை விட்டு விலகி இருக்கும்படி தன் உறவுகளுக்கு வஸிய்யத் செய்வது மிகவும் அவசியமான ஒரு விரும்பத்தக்க செயலாகும். மேலும் இந்த விஷயத்தை கட்டளையாகவும் வாக்குறுதியாகவும் அவர் தன் உறவுகளுக்கு அவர் வலியுறுத்துவார்.

வஸிய்யத் செய்பவர்: ......................................................................................

தந்தை பெயர்: ..................................................................................................

பிறந்த தேதி: ..................................................................................................

விலாசம்: .........................................................................................................

...............................................................................................................................

...............................................................................................................................

“நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் அறவே இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய தூதராக இருக்கிறார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன். இதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். இந்த எனது வஸிய்யத்தை பாதுகாத்து எனது நன்மையின் தட்டில் வைக்குமாறும் இவ்வுலகத்தில் எனது இறுதி சொல்லாக “லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்” வாக ஆக்க வேண்டும் எனவும் அல்லாஹ்விடம் நான் யாசிக்கிறேன்.

நான் அந்நியனாக, பரிதேசியாக வாழுகின்ற இந்த உலகத்தில் இதை விட்டு நான் பிரிந்து எனது மண்ணறைக்கு நான் செல்வதற்கு முன்பாக இந்த தூய திரு கலிமாவிற்கு முரண்படுகின்ற அனைத்தையும் விட்டு நான் என் பொறுப்பை நீக்கிக் கொள்கிறேன்.

---------------------

## பின் வருமாறு நான் "வஸிய்யத்" மரண சாசனம் செய்கிறேன்

1) "நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை அறவே இல்லை; நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள்; நிச்சயமாக ஈஸா அல்லாஹ்வின் அடியாராகவும் அவனது ரஸூலாகவும் மர்யமுக்கு அவன் அனுப்பிய வார்த்தையாகவும் அவன் புறத்தில் இருந்து ஊதப்பட்ட உயிராகவும் இருக்கிறார்கள்; நிச்சயமாக சொர்க்கம் உண்மையானது; நரகம் உண்மையானது; நிச்சயமாக மறுமை நாள் வந்தே தீரும், அதில் எவ்வித சந்தேகமும் இல்லை; நிச்சயமாக அல்லாஹ் மண்ணறையில் உள்ளவர்களை எழுப்புவான்" என்று நான் சாட்சி கூறுகிறேன்.

2) எனக்கு மரணம் நெருங்கினால் ஏகத்துவத்தில் உறுதியான, சுன்னாவை பற்றிப்பிடிக்கின்ற நல்லவர்களில் சிலர் என்னிடம் வர வேண்டும். அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைப்பதையும் அவனது அருளையும் மன்னிப்பையும் ஆதரவு வைப்பதையும் அவர்கள் எனக்கு நினைவூட்டி அறிவுரை கூறவேண்டும்.

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ الْأَنْصَارِيِّ رَضِيَ الله عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَبْلَ مَوْتِهِ بِثَلَاثَةِ

أَيَّامٍ يَقُولُ لَا يَمُوتَنَّ أَحَدُكُمْ إِلَّا وَهُوَ يُحْسِنُ الظَّنَّ بِاللهِ عَزَّ وَجَلَّ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது மரணத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்பாக கூறியதை நான் செவியுற்றேன். “உங்களில் ஒருவர், அவர் அல்லாஹ்வின் மீது எண்ணத்தை அழகுபடுத்தியவராகவே தவிர மரணிக்க வேண்டாம்.”

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல்அன்ஸாரி ரழியல்லாஹு அன்ஹு | நூல்: முஸ்லிம் | எண்: 2877

எனது இந்த நிலையில் எனது சொந்த செல்வத்தில் இருந்து என் மீதுள்ள கடன்களை அடைக்க வேண்டும் என்று நான் ஆதரவு வைக்கிறேன். என்னிடம் செல்வம் இல்லை என்றால் எனது இரத்த பந்தங்கள் அதை சுமந்து கொள்ளவேண்டும். அவர்கள் பொறுப்பெடுக்க வேண்டும். அவர்களுக்கு அதற்குரிய ஆற்றல் இல்லை என்றால் அல்லது அவர்கள் இதற்கு ஒத்துவர வில்லை என்றால், அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் செல்வ செழிப்புள்ள நல்ல மனமுள்ளவர்களிடம் எனது கடனை பொறுப்பேற்றுக் கொள்ளும்படியும் அதை நிறைவேற்றும்படியும் அந்த நல்லவர்கள் கோரட்டும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَفْسُ الْمُؤْمِنِ مُعَلَّقَةٌ بِدَيْنِهِ حَتَّى يُقْضَى عَنْهُ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்:

முஃமின் - நம்பிக்கையாளருடைய உயிர் அவருடைய கடனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது, அந்த கடன் அவர் சார்பாக நிறைவேற்றப்படுகின்றவரை.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: சுனன் அத்திர்மிதி | எண்: 1078

3) அந்த நல்லவர்கள் எனக்கு ஷஹாதாவை சொல்லித் தர வேண்டும்.

عن أَبِي سَعِيدٍ الْخُدْرِيّ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَقِّنُوا مَوْتَاكُمْ لَا إِلَهَ إِلَّا اللّٰهُ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்: உங்களில் மரணம் சமீபித்தவர்களுக்கு "லாஇலாஹ இல்லல்லாஹ்" வை சொல்லிக் கொடுங்கள்!

அறிவிப்பாளர்: அபூ ஸயீது அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 916

நான் தூய திரு கலிமாவை மொழிந்துவிட்டால் அதை எனக்கு திரும்பத் திரும்ப சொல்லித் தர வேண்டாம். நான் அதை மொழியவில்லை என்றால் மென்மையாகவும் நிதானமாகவும் எனக்கு அவர்கள் அதை சொல்லித்தரவும். அவர்கள் அமைதியான மென்மையான தொனியில் எனக்கு அதை பல முறை, கட்டளையாக இல்லாமல், சாடையாக மட்டும், கூறட்டும்.

4) என்னை காண வந்திருப்பவர்கள் எனக்காக துஆ கேட்கட்டும். என் அருகில் நல்லதைத் தவிர வேறு எதையும் கூற வேண்டாம்.

عَنْ أُمِّ سَلَمَةَ قَالَتْ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا حَضَرْتُمُ الْمَرِيضَ أَوِ الْمَيِّتَ فَقُولُوا خَيْرًا فَإِنَّ الْمَلَائِكَةَ يُؤَمِّنُونَ عَلَى مَا تَقُولُونَ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் நோயாளிடம் வந்தால் அல்லது மரணத்தருவாயில் உள்ளவரிடம் வந்தால் நல்லதையே சொல்லுங்கள். ஏனெனில், வானவர்கள் நீங்கள் சொல்வதற்கு ஆமீன் (அல்லாஹ்வே! ஏற்றுக் கொள்! என்று) கூறுகிறார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு சலமா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 919

5) என்னை கிப்லா திசையை முன்னோக்கி வைக்க வேண்டாம். என்னை நான் இருக்கின்ற அதே நிலையில் விட்டு விடட்டும். எனக்கருகில் சூரா யாஸீன் ஓதவேண்டாம். இதை (மட்டும் விஷேசமாக) ஓதுவதற்கு குர்ஆன், சுன்னாவில் சரியான ஆதாரம் ஏதும் இல்லை.

6) நான் மரணித்துவிட்டேன் என்று அவர்கள் உறுதி செய்துகொண்டால் அவர்கள் என் கண்களை மூடி எனக்காக துஆ கேட்கட்டும்.

عَنْ أُمِّ سَلَمَةَ رَضِيَ الله عَنْهَا قَالَتْ دَخَلَ رَسُولُ اللّٰهِ صَلى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى أَبِي سَلَمَةَ وَقَدْ شَقَّ بَصَرُهُ فَأَغْمَضَهُ ثُمَّ قَالَ إِنَّ الرُّوحَ إِذَا قُبِضَ تَبِعَهُ الْبَصَرُ فَضَجَّ نَاسٌ مِنْ

أَهْلِهِ فَقَالَ لَا تَدْعُوا عَلَى أَنْفُسِكُمْ إِلَّا بِخَيْرٍ فَإِنَّ الْمَلَائِكَةَ يُؤَمِّنُونَ عَلَى مَا تَقُولُونَ ثُمَّ قَالَ اَللّٰهُمَّ اغْفِرْ لِأَبِي سَلَمَةَ وَارْفَعْ دَرَجَتَهُ فِي الْمَهْدِيِّينَ وَاخْلُفْهُ فِي عَقِبِهِ فِي الْغَابِرِينَ وَاغْفِرْ لَنَا وَلَهُ يَا رَبَّ الْعَالَمِينَ وَافْسَحْ لَهُ فِي قَبْرِهِ وَنَوِّرْ لَهُ فِيهِ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூ சலமாவிடம் வந்தார்கள். அவரின் பார்வை திறந்து இருந்தது. அவர்கள் அதை மூடினார்கள். பிறகு, கூறினார்கள்: “உயிர் கைப்பற்றப்பட்டுவிட்டால் பார்வை அதைத் தொடர்ந்து செல்கிறது.” அவரின் குடும்பத்தாரில் சில மக்கள் கூச்சல் போட்டனர். அதற்கு (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள்: உங்களுக்கு எதிராக துஆ கேட்காதீர்கள். மாறாக நல்லதையே துஆ கேளுங்கள்! நீங்கள் சொல்வதற்கு மலக்குகள் ஆமீன் கூறுகிறார்கள்.

பிறகு, கூறினார்கள்: அல்லாஹ்வே! அபூ சலமாவை மன்னித்து விடு! நேர்வழி பெற்றவர்களில் அவரின் அந்தஸ்தை உயர்த்திவிடு! அவருக்குப் பின் பின்தங்கி இருக்கின்ற உறவினர்களுக்கு நீ பிரதிநிதியாக இரு. அகிலங்களின் இறைவனே! எங்களையும் அவரையும் மன்னிப்பாயாக! அவரின் கப்ரில் - மண்ணறையில் அவருக்கு விசாலத்தை ஏற்படுத்து! அவருக்கு அதில் ஒளியை ஏற்படுத்து!!

அறிவிப்பாளர்: உம்மு சலமா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 920

நான் மரணித்து விட்டேன் எனபது தெளிவாகிவிட்டால், என்னை அடக்கம் செய்வதற்குரிய வேலைகளை தீவிரமாக செய்ய வேண்டும். எனது ஜனாஸாவை விரைவாகச் கொண்டு செல்ல வேண்டும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ أَسْرِعُوا بِالْجَنَازَةِ فَإِنْ تَكُ صَالِحَةً فَخَيْرٌ تُقَدِّمُونَهَا عَلَيْهِ وَإِنْ تَكُنْ غَيْرَ ذَلِكَ فَشَرٌّ تَضَعُونَهُ عَنْ رِقَابِكُمْ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஜனாஸாவை விரைவு படுத்துங்கள்! அது நல்ல ஜனாஸாவாக இருந்தால் அதை நன்மையின் பக்கம் நீங்கள் முற்படுத்துகின்றீர்கள். அது வேறு ஒன்றாக இருந்தால் (நல்ல ஜனாஸாவாக இல்லை என்றால்) உங்கள் பிடரிகளை விட்டும் ஒரு தீயதை (விரைவாக) கீழே வைக்கின்றீர்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 944

8) நான் எந்த ஊரில் இறந்தேனோ அதே ஊரில் என்னை அடக்கம் செய்யவும்.

இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் தனது அத்கார் நூலில் இவ்வாறுதான் கூறியுள்ளார்கள். மேலும், அதிகமான அறிஞர்களின் முடிவின் படி இதுதான் ஏற்றமான கூற்றாகும். சட்ட வல்லுநர்களும் இதைத்தான் தெளிவுபட கூறியுள்ளார்கள்" என்று இமாம் நவவி குறிப்பிட்டுள்ளார்கள்.

9) நான் ஹஜ் (அல்லது உம்ரா) பயணத்தில் இஹ்ராம் உடைய நிலையில் இல்லை என்றால் என் உடல் முழுவதையும் ஓர் ஆடையினால் மறைக்க வேண்டும்.

عن عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا زَوْج النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَخْبَرَتْهُ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حِينَ تُوُفِّيَ سُجِّيَ بِبُرْدٍ حِبَرَةٍ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்த போது ஹிரா தேசத்தில் செய்யப்பட்ட ஒரு போர்வையினால் முழுமையாக மறைக்கப்பட்டார்கள்.
அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 5814

நான் ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்ற நிலையில் மரணித்து விட்டால், என் தலையையும் என் முகத்தையும் மறைக்க வேண்டாம்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ بَيْنَا رَجُلٌ وَاقِفٌ مَعَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِعَرَفَةَ إِذْ وَقَعَ عَنْ رَاحِلَتِهِ فَوَقَصَتْهُ أَوْ قَالَ: فَأَوْقَصَتْهُ فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اغْسِلُوهُ بِمَاءٍ وَسِدْرٍ وَكَفِّنُوهُ فِي ثَوْبَيْنِ وَلاَ تَمَسُّوهُ طِيبًا وَلاَ تُخَمِّرُوا رَأْسَهُ وَلاَ تُحَنِّطُوهُ فَإِنَّ اللَّهَ يَبْعَثُهُ يَوْمَ القِيَامَةِ مُلَبِّيًا

ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களுடன் அரஃபா பெருவெளியில் நின்றிருந்த போது தனது வாகனத்தில் இருந்து அவர் விழுந்து விட்டார். அது அவரை மிதித்து விட்டது. (அவர் இறந்து விட்டார்.) ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “அவரை தண்ணீர் மற்றும் இலந்த இலையினால் குளிப்பாட்டுங்கள். இரண்டு ஆடைகளில் அவருக்கு கஃபன் இடுங்கள். அவருக்கு நறுமணம் பூசாதீர்கள். அவரது தலையை மூடாதீர்கள். அவருக்கு (கஃபன் துணியில்) வாசனை பொருட்களை வைக்காதீர்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1850

10) இலந்தை இலை கலந்த நீரினால் என்னை குளிப்பாட்டவும். அல்லது சோப்பு போன்ற சுத்தத்தை ஏற்படுத்தும் பொருள்களால் குளிப்பாட்டவும். மூன்று முறை அல்லது ஐந்து முறை அல்லது தேவை என்றால் அதற்கு அதிகமாக ஆனால், ஒற்றைப் படையில் என்னை குளிப்பாட்டவும். கடைசியாக தண்ணீர் ஊற்றும் போது கற்பூரம் கலந்து குளிப்பாட்டவும். நான் இஹ்ராமுடைய நிலையில் இருந்தால் அதை தவிர்த்து விடவும். எனக்கு நெருக்கமானவர்கள் என்னை குளிப்பாட்டவும். அவருக்கு குளிப்பாட்டும் முறை தெரியவில்லை என்றால் தெரிந்த ஒருவர் அவருக்கு அருகில் இருந்து அவருக்கு கற்பிக்கவும். கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் உள்ளூரில் இருந்து என் வஸிய்யத்தின் படி அவர்கள் என்னை குளிப்பாட்ட விரும்பினால் அவர்கள் என்னை குளிப்பாட்டுவதை நான் தேர்வு செய்கிறேன். அவர்களில் யாராவது உள்ளூரில் இல்லை எனில் அவரை இதற்காக அழைக்க வேண்டாம்.

அவர்கள்:

1. ..................................................

2. ..................................................

3. ..................................................

4. ..................................................

11) நான் போரில் இறந்துவிட்டால் என்னை யாரும் குளிப்பாட்ட வேண்டாம். மாறாக, என்னை என் ஆடையில் சுருட்டி, என் மீதுள்ள இரத்தத்துடன் என்னை அடக்கம் செய்ய வேண்டும்.

عَنْ جَابِرٍ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ادْفِنُوهُمْ فِي دِمَائِهِمْ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அவர்களை (ஷஹீதுகளை) அவர்களின் இரத்தங்களுடன் அடக்கம் செய்யுங்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1346

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ الله عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ لَا يُكْلَمُ أَحَدٌ فِي سَبِيلِ اللهِ وَاللهُ أَعْلَمُ بِمَنْ يُكْلَمُ فِي سَبِيلِهِ إِلَّا جَاءَ يَوْمَ الْقِيَامَةِ وَجُرْحُهُ يَثْعَبُ اللَّوْنُ لَوْنُ دَمٍ وَالرِّيحُ رِيحُ مِسْكٍ

மேலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் ஒருவர் காயப்பட்டால், - தனது பாதையில் காயப்படுவோரை அல்லாஹ் மிக அறிந்தவன் - அவர் மறுமை நாளில் காயத்தில் இருந்து இரத்தம் சொட்டியவராக வருவார். நிறம் இரத்தத்தின் நிறமாகவும், வாடை கஸ்தூரியின் வாடையாகவும் இருக்கும்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 1876

12) வெள்ளை நிற துணிகளில் என்னை கஃபன் இடவும்.

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ الله عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الْبَسُوا مِنْ ثِيَابِكُمُ الْبَيَاضَ فَإِنَّهَا مِنْ خَيْرِ ثِيَابِكُمْ وَكَفِّنُوا فِيهَا مَوْتَاكُمْ

வெள்ளை நிற ஆடைகளை அணியுங்கள்! அவை உங்கள் ஆடைகளில் சிறந்த ஆடைகளாகும். இன்னும், உங்களில் இறந்தவர்களை அவற்றில் கஃபன் இடுங்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா | நூல்: சுனன் அத்திர்மிதி | எண்: 994

13) தைக்கப்பட்ட சட்டை, தலைப்பாகை ஆகியவற்றை தவிர்த்து மூன்று துணிகளில் கஃபன் அமைய வேண்டும்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا أَنَّ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ

وَسَلَّمَ كُفِّنَ فِي ثَلاَثَةِ أَثْوَابٍ بِيضٍ سَحُولِيَّةٍ لَيْسَ فِيهَا قَمِيصٌ وَلاَ عِمَامَةٌ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மென்மையான வெண்மையான எமன் தேசத்தின் மூன்று ஆடைகளில் கஃபன் இடப்பட்டார்கள். அவற்றில் சட்டை, தலைப்பாகை இருக்கவில்லை.

அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1273

14) நான் இஹ்ராமுடைய நிலையில் இல்லை எனில், மூன்று முறை நறுமணம் கலந்த புகை காட்டவும்.

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ إِذَا جَمَّرْتُمُ الْمَيِّتَ فَأَوْتِرُوا

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இறந்தவருக்கு நறுமண புகை காட்டினால் ஒற்றைப் படையில் காட்டுங்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் ஜாமி | எண்: 481

அவ்வாறு புகை காட்ட முடியவில்லை எனில் ஆகுமான, சந்தேகத்திற்கு இடமில்லாத தூய்மையான நறுமணத்தால் எனக்கு நறுமணம் பூசட்டும். நறுமண விஷயத்தில் அளவு கடக்காமல் இருக்கவும். காதுகளுக்கு பின் புறத்திலும், மூக்கிலும், விரல்களுக்கு இடையிலும் நறுமணத்தை வைக்கவும். அதிகமாகவும் வைக்க வேண்டாம்.

15) கஃபன் துணி அதிக விலையுள்ளதாக இருக்க வேண்டாம். மூன்று ஆடைகளுக்கு மேலாகவும் அது இருக்க வேண்டாம்.

عَنِ الْمُغِيرَةِ بْنِ شُعْبَةَ رَضِيَ اللهُ عَنْهُ قال سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِنَّ اللّٰهَ كَرِهَ لَكُمْ ثَلاَثًا قِيلَ وَقَالَ وَإِضَاعَةَ الْمَالِ وَكَثْرَةَ السُّؤَالِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு மூன்றை வெறுத்துள்ளான். (அவை, ஆதாரமின்றி இப்படி) சொல்லப்பட்டது என்று சொல்வது, (ஆதாரமின்றி இன்னார்) சொன்னார் என்று சொல்வது, செல்வத்தை வீணாக்குவது, அதிகம் கேள்வி கேட்பது.

அறிவிப்பாளர்: முகீரா இப்னு ஷுஃபா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1477

16) எனது மரண செய்தியை பிரகடனப்படுத்தாதீர்கள். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடை செய்த நஃயி என்ற செயலைச் சேர்ந்ததாகும்.

عَنْ حُذَيْفَةَ بْنِ الْيَمَانِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ إِذَا مِتُّ فَلاَ تُؤْذِنُوا بِي إِنِّي أَخَافُ أَنْ يَكُونَ نَعْيًا فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَنْهَى عَنِ النَّعْيِ

ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு வஸிய்யத் செய்ததாக பின் வருமாறு அறிவிக்கப்படுகின்றது.

“நான் இறந்துவிட்டால் ஒருவருக்கும் என் இறப்பைப் பற்றி அறிவிக்காதீர்கள். அது நஃயி ஆகிவிடும் என்று நான் பயப்படுகின்றேன். ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நஃயியை விட்டும் தடுப்பதை நான் செவியுற்றுள்ளேன்.

* நஃயி என்றால் மரண அறிவிப்பு செய்தல்.

அறிவிப்பாளர்: பிலால் இப்னு யஹ்யா ரஹிமஹுல்லாஹ் | நூல்: சுனன் அத்திர்மிதி | எண்: 986

என்னை குளிப்பாட்டுபவருக்கும் எனக்குத் தொழுகை நடத்துபவருக்கும் என் மரணத்தை அறிவிப்பு செய்யலாம். அவர் எனக்காக பாவமன்னிப்புத் தேடும்படி மக்களிடம் கோருவார்.

**عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ نَعَى لَنَا رَسُولُ اللهِ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّجَاشِيَّ صَاحِبَ الْحَبَشَةِ يَوْمَ الَّذِي مَاتَ فِيهِ فَقَالَ اسْتَغْفِرُوا لِأَخِيكُمْ**

ஹபஷாவின் மன்னரான நஜ்ஜாஷியின் மரண செய்தியை அவர் இறந்த அன்றே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு கூறிவிட்டு, உங்கள் சகோதரருக்கு பாவமன்னிப்புத் தேடுங்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1327

17) என் மீது யாரும் ஒப்பாரி வைத்து அழக்கூடாது. நீங்கள் ஒப்பாரி வைத்து அழுவது நான் தண்டனை

செய்யப்படுவதற்கு காரணமாக ஆகிவிடும். என்னைக் காண வருபவர்கள் தனது மனதை அடக்கிக் கொள்ளட்டும். எனக்காக பாவமன்னிப்பு தேடட்டும்.

عَنْ عَبْدِ اللهِ رَضِيَ الله عَنْهُ أَنَّ حَفْصَةَ رَضِيَ الله عَنْهَا بَكَتْ عَلَى عُمَرَ فَقَالَ مَهْلًا يَا بُنَيَّةُ أَلَمْ تَعْلَمِي أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَال إِنَّ الْمَيِّتَ يُعَذَّبُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ

ஹஃப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மீது அழுதார்கள். அப்போது உமர் கூறினார்கள்: என் செல்ல மகளே! "நிச்சயமாக மரணிப்பவர் தனது குடும்பத்தினர் தனக்காக அழுவதினால் தண்டனை செய்யப்படுகின்றார்" என்று ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நீர் அறியமாட்டீரா?

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 927

عَنِ الْمُغِيرَةَ بْن شُعْبَةَ رَضِيَ الله عَنْهُ سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ مَنْ نِيحَ عَلَيْهِ فَإِنَّهُ يُعَذَّبُ بِمَا نِيحَ عَلَيْهِ يَوْمَ الْقِيَامَةِ

மேலும் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: யாருக்காக ஒப்பாரி வைக்கப்படுமோ அவருக்காக ஒப்பாரி வைக்கப்பட்டதால் மறுமை நாளில் அவர் வேதனை செய்யப்படுவார்.

அறிவிப்பாளர்: முகீரா இப்னு ஷுஃபா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1291

18) எனது ஜனாஸாவைப் பார்க்க வருகின்ற பெண்கள் கூச்சலிடுவதோ, கன்னத்தில், முகத்தில், தலையில் அடித்துக் கொள்வதோ கூடாது. அல்லாஹ்வின் விதியின் மீது ஆட்சேபணை செய்யும் விதமாக உள்ள எந்த காரியத்தையும் செய்யக் கூடாது, எந்த சொல்லையும் சொல்லக் கூடாது.

عن أَبِي مَالِكٍ الْأَشْعَرِيّ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّائِحَةُ إِذَا لَمْ تَتُبْ قَبْلَ مَوْتِهَا تُقَامُ يَوْمَ الْقِيَامَةِ وَعَلَيْهَا سِرْبَالٌ مِنْ قَطِرَانٍ وَدِرْعٌ مِنْ جَرَبٍ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒப்பாரிவைப்பவள் தனது மரணத்திற்கு முன்னர் திருந்தி தவ்பா செய்யவில்லை என்றால் மறுமை நாளில் அவள் மீது தாரினால் செய்யப்பட்ட ஆடையும் சொரியை உண்டாக்கும் சட்டை ஒன்றும் இருக்கின்ற நிலையில் அவள் நிறுத்தப்படுவாள். (சட்டை உடலை மூடுவது போல் சொரியினால் உண்டாகும் சிரங்கு உடலை மூடிக் கொள்ளும்.)

அறிவிப்பாளர்: அபூமாலிக் அல்அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 934

عَنْ عَبْدِ اللهِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ

عَلَيْهِ وَسَلَّمَ لَيْسَ مِنَّا مَنْ لَطَمَ الْخُدُودَ وَشَقَّ الْجُيُوبَ وَدَعَا بِدَعْوَى الْجَاهِلِيَّةِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: கன்னங்களில் அறைபவரும் முன் சட்டைகளை கிழிப்பவர்களும் அறியாமைக் கால வாதங்களை செய்பவர்களும் நம்மை சேர்ந்தவர்கள் இல்லை.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1294

عَنْ أَبِي مُوسَى الْأَشْعَرِيِّ رَضِيَ اللّٰه عَنْهُ قَالَ إِنَّ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بَرِئَ مِنَ الصَّالِقَةِ وَالْحَالِقَةِ وَالشَّاقَّةِ

துன்பங்களின் போது கத்தி கதறுகின்ற பெண்களை விட்டும், முடிகளை சிரைக்கின்ற பெண்களை விட்டும், தனது சட்டைகளை கிழிக்கின்ற பெண்களை விட்டும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீங்கியவர்கள்.

அறிவிப்பாளர்: அபூ மூஸா அல் அஸ்அரி ரழியல்லாஹு அன்ஹு | நூல்: !ஸஹீஹுஷ் முஸ்லிம் | எண்: 104

19) எனது ஜனாஸாவை பெண்கள் பின்தொடர்ந்து வரக்கூடாது.

عَنْ أُمِّ عَطِيَّةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا قَالَتْ نُهِينَا عَنْ اتِّبَاعِ الْجَنَائِزِ وَلَمْ يُعْزَمْ عَلَيْنَا

நாங்கள் (-பெண்கள்) ஜனாஸாக்களை பின்தொடர்ந்து செல்வதை விட்டும் தடுக்கப்பட்டோம். ஆனால் அந்தத் தடையை எங்கள் மீது உறுதியாக்கவில்லை.

அறிவிப்பாளர்: உம்மு அத்தியா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1278

21) என் ஜனாஸாவை பின்தொடர்ந்து வருபவர் அமைதியான, அடக்கமான, சிந்தனையுடன் வர வேண்டும். அவர் பிறருக்கும் இதையே ஏவ வேண்டும்.

ஜனாஸாவுடன் செல்லும் போது சப்தமாக ஓதுவதோ, திக்ரு செய்வதோ, கோஷங்கள் போடுவதோ கூடாது என்பதுதான் நமது சிறந்த சான்றோர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا تُتْبَعُ الْجَنَازَةُ بِصَوْتٍ وَلَا نَارٍ

ஜனாஸாவை சப்தத்துடன் மற்றும் நெருப்புடன் (உதாரணமாக சாம்பிரானி சட்டி, ஊது பத்திகள் உடன்) பின்தொடரக் கூடாது.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: சுனன் அபூ தாவூத் | எண்: 3171

இந்த ஹதீஸ் சிறிது பலவீனமாக இருந்தாலும் இந்த ஹதீஸின் கருத்து வேறு பல ஹதீஸ்களிலும் நபித் தோழர்களின் கூற்றுகளிலும் வந்திருப்பதால் இந்த ஹதீஸ் அமல் செய்வதற்கு தகுதி பெறுகிறது என்று ஷைகு அல்பானி அவர்கள் அஹ்காமுல் ஜனாயிஸ் என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

22) என் ஜனாஸாவை விரைவாக எடுத்து செல்ல வேண்டும். வீட்டில் இருந்து எந்த பாதை மண்ணறைக்கு

மிக நெருக்கமாக இருக்குமோ அந்த பாதை வழியாக கொண்டு செல்லவும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ أَسْرِعُوا بِالْجَنَازَةِ فَإِنْ تَكُ صَالِحَةً فَخَيْرٌ تُقَدِّمُونَهَا عَلَيْهِ وَإِنْ تَكُنْ غَيْرَ ذَلِكَ فَشَرٌّ تَضَعُونَهُ عَنْ رِقَابِكُمْ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஜனாஸாவை விரைவு படுத்துங்கள்! அது நல்ல ஜனாஸாவாக இருந்தால் அதை நன்மையின் பக்கம் நீங்கள் முற்படுத்துகின்றீர்கள். அது வேறு ஒன்றாக இருந்தால் (நல்ல ஜனாஸாவாக இல்லை என்றால்) உங்கள் பிடரிகளை விட்டும் ஒரு தீயதை (விரைவாக) கீழே வைக்கின்றீர்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 944

ஒவ்வொரு எட்டாக எடுத்து வைத்து செல்வதும், ஃபாத்திஹா ஓதுவதும், குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்வதும், குறிப்பிட்ட மஸ்ஜிதுகளில் நின்று செல்வதும் வெறுக்கப்பட்ட அனாச்சாரங்களில் உள்ள செயல்களாகும்.

23) என் ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வதற்காக அதிகமான நல்ல முஃமின்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்று என் ஜனாஸா காரியத்தை கவனிக்கும் நபரிடம் நான் விரும்புகிறேன். இதனால் அவர்களுக்கு அதிகமான நன்மையும் எனக்குப் பரிந்துரையும் கிடைக்கப் பெறும்.

عن أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ شَهِدَ الجَنَازَةَ حَتَّى يُصَلِّيَ فَلَهُ قِيرَاطٌ وَمَنْ شَهِدَ حَتَّى تُدْفَنَ كَانَ لَهُ قِيرَاطَانِ قِيلَ وَمَا القِيرَاطَانِ قَالَ مِثْلُ الجَبَلَيْنِ العَظِيمَيْنِ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: யார் ஜனாஸாவில் கலந்து கொள்வாரோ அவருக்கு ஒரு கீராத் நன்மையும் ஜனாஸா அடக்கம் செய்யப்படுகின்றவரை உடன் இருப்பவருக்கு இரண்டு கீராத் நன்மையும் கிடைக்கும். இரண்டு கீராத்கள் என்றால் என்ன என்று கேட்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அவை பெரிய இரண்டு மலைகளைப் போன்றாகும்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 1325

என் ஜனாஸாவை சுமந்து வந்தவர் அதன் பின்னர் உளூ செய்யவும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ غَسَّلَ مَيِّتًا فَلْيَغْتَسِلْ وَمَنْ حَمَلَهُ فَلْيَتَوَضَّأْ

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: யார் இறந்தவரை குளிப்பாட்டுவாரோ அவர் குளித்துக் கொள்ளட்டும். யார் அவரை சுமந்து செல்வாரோ அவர் உளூ செய்து கொள்ளட்டும்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: முஸ்னத் அஹ்மத் | எண்: 9862

24) அவர்கள் என் மீது ஜமாஅத்தாக - கூட்டாகத் தொழ வேண்டும். இதில் சிறப்பும் இறை அருளும் இருக்கிறது. எண்ணிக்கை அதிகமாக, அதிகமாக அது மிக சிறப்பாக இருக்கும்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَا مِنْ مَيِّتٍ تُصَلِّي عَلَيْهِ أُمَّةٌ مِنَ الْمُسْلِمِينَ يَبْلُغُونَ مِائَةً كُلُّهُمْ يَشْفَعُونَ لَهُ إِلَّا شُفِّعُوا فِيهِ

முஸ்லிம்களில் நூறு பேர் அளவுக்கு எட்டக்கூடிய ஒரு கூட்டம் இறந்தவர் ஒருவருக்கு தொழுது அவருக்கு சிபாரிசு செய்தால் (- அவருக்காக அல்லாஹ்விடம் அவர்கள் துஆ செய்தால்) அவர் விஷயத்தில் அவர்களின் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படும்.

அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 947

மூன்று வரிசைகளில், இன்னும் அதற்கு அதிகமான வரிசைகளில் தொழுபவர்கள் நிற்பது மிக விரும்பத்தக்க ஒன்றாகும்.

عَنْ أَبِي أُمَامَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ عَلَى جَنَازَةٍ وَمَعَهُ سَبْعَةُ نَفَرٍ فَجَعَلَ ثَلَاثَةً صَفًّا وَاثْنَيْنِ صَفًّا وَاثْنَيْنِ صَفًّا

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஜனாஸாவிற்கு தொழவைத்தார்கள். அவர்களுடன் ஏழு நபர்கள் இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று நபர்களை ஒரு வரிசையிலும் இருவரை ஒரு வரிசையிலும் மற்ற இருவரை ஒரு வரிசையிலும் ஆக்கினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு | நூல்: அஹ்காமுல் ஜனாயிஸ் - ஷைக் அல்பானி | எண்: 127

25) என்னை அடக்கம் செய்தவுடன் எல்லா காரியங்களும் முடிந்து விடும். ஒவ்வொருவரும் அவரவர் வேலைக்குச் சென்று விடவும். என் குடும்பத்தாரை சந்திப்பவர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறவும்.

26) என் குடும்பத்தார்கள் அல்லது மற்றவர்கள் யாரும் ஒரு குறிப்பிட்ட இடத்தை, அறையை, கூடாரத்தை இரங்கல் பெறுவதற்காக ஏற்படுத்தக் கூடாது. இத்தகைய செயல்களை விட்டு நான் விலகிக் கொள்கிறேன். குர்ஆன் ஓதுவதற்கும் அல்லது திக்ர் செய்வதற்கும் அல்லது வேறு எந்த விதமான சடங்குகளை செய்வதற்கும் யாரையும் அவர்கள் அழைக்கக் கூடாது. மூன்றாம் பாத்திஹா, நாற்பதாம் நாள் ஃபாத்திஹா, வருஷ ஃபாத்திஹா செய்வது கூடாது. இது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய செயலும் அல்ல, நபித்தோழர்களின் செயலும் அல்ல.

27) இறந்தவரின் வீட்டார்கள் உணவு செய்யக் கூடாது. மாறாக, அண்டை வீட்டார்கள்தான் உணவு செய்து இறந்தவரின் வீட்டார்களுக்கு வழங்க வேண்டும்.

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ جَعْفَرٍ رَضِيَ الله عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اصْنَعُوا لِآلِ جَعْفَرٍ طَعَامًا فَإِنَّهُ قَدْ أَتَاهُمْ أَمْرٌ شَغَلَهُمْ

ஜாஃபர் இப்னு அபூதாலிப் ரழியல்லாஹு அன்ஹு கொல்லப்பட்ட போது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஜாஃபரின் குடும்பத்தார்களுக்கு உணவு செய்யுங்கள். ஏனெனில், (உணவு செய்வதை விட்டும்) அவர்களை ஈடுபடுத்தக் கூடிய ஒன்று அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. (- அதாவது இப்போது அவர்கள் தங்களுக்கு உணவு சமைத்துக் கொள்ள முடியாத துக்க நிலையில் இருக்கிறார்கள்.)

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் ரழியல்லாஹு அன்ஹு | நூல்: சுனன் அபூ தாவூத் | எண்: 3132

28) என் மீது, நான் நோற்காமல் விட்ட கடமையான ரமழான் நோன்புகள், அல்லது நேர்ச்சையின் நோன்புகள் இருந்தால் அவற்றை என் உறவினர்கள் என் சார்பாக நோற்கட்டும். என் மீது ஹஜ் கடமையாக இருந்து நான் ஹஜ் செய்யாமல் இறந்துவிட்டால் என் செல்வத்தில் இருந்து ஹஜ் கடமையை நிறை வேற்ற வேண்டும்.

29) என் மீதுள்ள கடன்களை நிறைவேற்ற வேண்டும் என்று நான் வஸிய்யத் செய்கிறேன்.

நான் யார் யாருக்கு என்னென்ன கொடுக்க வேண்டும் என்பதின் விவரம்

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

4. ..........................................................................................................................

30) அவ்வாறே கீழ்க் காணும் விஷயங்களையும் நான் வஸிய்யத் செய்கிறேன்.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

31) இந்தளவு தொகையை ............................ (எண்: ......................) நான் வஸிய்யத் செய்கிறேன்.

நான் வஸிய்யத் செய்த அந்தத் தொகை என் செல்வத்தில் மூன்றில் ஒன்றை விட அதிகமாகிவிடக் கூடாது.

அந்தத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நல்ல வழிகளில், அறக் காரியங்களில் செலவழிக்கப்பட வேண்டும்.

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

4. ..........................................................................................................................

5. ..........................................................................................................................

6. ......................................................................................................................................

7. ......................................................................................................................................

8. ......................................................................................................................................

9. ......................................................................................................................................

10. ....................................................................................................................................

எனது இந்த வஸிய்யத்திற்கு நான் கீழே குறிப்பிட்டுள்ள நபர்களை வக்கீல்களாக - பொறுப்பாளர்களாக ஆக்குகின்றேன்.

1. ......................................................................................................................................

2. ......................................................................................................................................

3. ......................................................................................................................................

4. ......................................................................................................................................

5. ......................................................................................................................................

32) எனது செல்வங்கள் மற்றும் சொத்துகளில் மீதம் உள்ளதை எனது வாரிசுகளுக்கு மத்தியில் அல்லாஹ்வின் வேதம், மற்றும் அவனுடைய தூதரின் சுன்னாவின் சட்ட விதிகளின் படி பங்கு வைக்க வேண்டும்.

எனது செல்வத்தில் எனது வாரிசுகள் அல்லாஹ்வை பயந்து கொள்ளட்டும். அந்த செல்வத்தை அல்லாஹ்வின் கட்டளைக்கு உட்பட்டே செலவழிக்கவும். நல்ல காரியங்களில் மட்டும் என் செல்வத்தை பயன்படுத்தவும். செல்வம் அல்லாஹ்வுடைய செல்வம். நாம் அதில் வெறும் பிரதிநிதிகள் மட்டும்தான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنْ أَحْسَنْتُمْ أَحْسَنْتُمْ لِأَنْفُسِكُمْ وَإِنْ أَسَأْتُمْ فَلَهَا

நீங்கள் நல்லது செய்தால் நீங்கள் உங்கள் ஆன்மாக்களுக்கே நல்லது செய்தீர்கள். நீங்கள் கெட்டது செய்தால் அந்த கெட்டது உங்கள் ஆன்மாக்களுக்குத்தான். (அல்குர்ஆன் 17:7)

33) என் குடும்பத்தில், என் உறவுகளில், என் சொந்தங்களில் நான் யாரை எல்லாம் விட்டுச் செல்கிறேனோ அவர்களுக்கு நான் வஸிய்யத் செய்கிறேன்: "அவர்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளட்டும். தங்களுக்கு மத்தியில் ஒற்றுமையுடன், சீர் திருத்தத்துடன் நடந்து கொள்ளட்டும். அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தங்களுக்கு மத்தியில் சத்தியத்தை ஏவி, அதன் மீது பொறுமையுடன் இருக்க வேண்டும். இப்ராஹீமும் யஅகூபும் (அலைஹிமா அஸ்ஸலாம்) தங்களது பிள்ளைகளுக்கு செய்த வஸிய்யத்தையும் நான் என் வாரிசுகளுக்கு செய்கிறேன்.

وَوَصَّى بِهَا إِبْرَاهِيمُ بَنِيهِ وَيَعْقُوبُ يَابَنِيَّ إِنَّ اللَّهَ اصْطَفَى
لَكُمُ الدِّينَ فَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

இப்ராஹீம் மற்றும் யஅகூபும் தங்களது பிள்ளைகளுக்கு இதைத்தான் வஸிய்யத் செய்தார்கள். என் பிள்ளைகளே! நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு இந்த மார்க்கத்தை

தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம்களாகவே தவிர ஒருபோதும் மரணித்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 2:132)

34 நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை அறவே இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

இதன் மீதே நான் வாழ்கிறேன். இதன் மீதே நான் மரணிக்கிறேன். இதன் மீதே நான் அல்லாஹ்வை சந்திப்பேன். அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்கும் அவனது தூதரின் சுன்னாவிற்கும் முரண்படுகின்ற எல்லா சொல், செயல்களை விட்டும் விலகி நான் அல்லாஹ்வின் பக்கம் ஒதுங்கி விடுகிறேன்.

இவைதான் இவ்வுலகில் என் நினைவில் உள்ளபடி என் சம்பந்தப்பட்ட விஷயங்கள். எனக்கு சேர வேண்டியவை, நான் செய்ய வேண்டியவை, எனது உரிமைகள், என் மீதுள்ள உரிமைகள் ஆகும். இதன் மூலம் என் பொறுப்பை நான் நீக்கிக் கொண்டேன்; என் அமானிதத்தை நான் நிறைவேற்றி விட்டேன் என்று நான் நல்லாதரவு வைக்கின்றேன். அல்லாஹ் என் மீது கருணை காட்ட வேண்டும் என்றும், என் தவறுகளையும் பாவங்களையும் மறதியையும் மன்னிக்க வேண்டும் என்றும் நான் மன்றாடுகின்றேன். அல்லாஹ்தான் சாட்சியாளர்களில் மிகச் சிறந்தவன். அவன்தான் கருணையாளர்களில் மகா கருணையாளன்.

நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவருடைய குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஆசீர்வாதங்களும் ஈடேற்றமும் நிலவட்டும்.

இதை எழுதியதுடன் இதில் உள்ளவற்றை நான் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன்.

இந்த வஸிய்யத்தை செய்பவர்:

பெயர்: ..............................................................................................................................

தேதி ஹிஜ்ரி: ................................................... ஈசவி: .....................................

கையொப்பம்: ......................................................................................................

சாட்சிகள்:

பெயர்: ..............................................................................................................................

தேதி ஹிஜ்ரி: ................................................... ஈசவி: .....................................

கையொப்பம்: ......................................................................................................

பெயர்: ..............................................................................................................................

தேதி ஹிஜ்ரி: ................................................... ஈசவி: .....................................

கையொப்பம்: ......................................................................................................

பெயர்: ..............................................................................................................................

தேதி ஹிஜ்ரி: ................................................... ஈசவி: .....................................

கையொப்பம்: ......................................................................................................

பெயர்: ..............................................................................................................................

தேதி ஹிஜ்ரி: ........................................................ ஈ·சவி: ..........................................

கையொப்பம்: ..............................................................................................................

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் நல்லதைத் தா! மறுமையிலும் நல்லதைத் தா! எங்களை நரகத்தின் வேதனையை விட்டும் பாதுகாப்பாயாக! (அல்குர்ஆன் 2:201)

## முடிவுரை

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவன்தான் வஸிய்யத் சம்பந்தபட்ட இந்த சிறு கையேட்டை கோர்வை செய்வதற்கு உதவி செய்தான். இந்த சிறு நூலை தனது கண்ணியமான திரு முகத்திற்காக செய்யப்பட்ட அமலாக அல்லாஹ் ஆக்குவானாக! அவன்தான் இதற்கு பொறுப்பாளன், இதன் மீது ஆற்றலுடையவன் ஆவான்.

رَبَّنَا إِنَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக! நரக வேதனையை விட்டு எங்களை பாதுகாப்பாயாக! (அல்குர்ஆன் 3:16)

رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَإِلَيْكَ أَنَبْنَا وَإِلَيْكَ الْمَصِيرُ

எங்கள் இறைவா! உன் மீது நாங்கள் நம்பிக்கை வைத்தோம். உன் பக்கமே நாங்கள் திரும்பினோம். உன் பக்கமே மீளுமிடம் இருக்கின்றது. (அல்குர்ஆன் 60:4)

رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَتَوَفَّنَا مُسْلِمِينَ

எங்கள் இறைவா! எங்கள் மீது பொறுமையை, உறுதியை இறக்குவாயாக! முஸ்லிம்களாக எங்களை உயிர் கைப்பற்றுவாயாக! (அல்குர்ஆன் 7:126)

رَبَّنَا إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِي لِلْإِيمَانِ أَنْ آمِنُوا بِرَبِّكُمْ فَآمَنَّا رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ

எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் ஈமானுக்கு அழைக்கின்ற அழைப்பாளரை செவியுற்றோம். அதாவது உங்கள் இறைவனை நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். ஆகவே, எங்கள் இறைவா நாங்கள் நம்பிக்கை கொண்டோம். எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக! எங்கள் குற்றங்களை எங்களை விட்டும் அகற்றிவிடுவாயாக! எங்களை நல்லவர்களுடன் உயிர் கைப்பற்றுவாயாக! (அல்குர்ஆன் 3:193)

رَبَّنَا وَآتِنَا مَا وَعَدْتَنَا عَلَى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيَامَةِ إِنَّكَ لَا تُخْلِفُ الْمِيعَادَ

எங்கள் இறைவா! நீ எங்களுக்கு உனது தூதர் மூலம்

வாக்களித்ததை தருவாயாக! மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தாதே! நிச்சயமாக நீ வாக்கை மீற மாட்டாய். (அல்குர்ஆன் 3:194)

நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவருடைய குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஆசீர்வாதங்களும் ஈடேற்றமும் நிலவட்டும். நிச்சயமாக எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ்விற்கே! என்பதுதான் எங்கள் இறுதி பேச்சாகும்.

வஸிய்யத் செய்வதற்கு சில ஆலோசனைகள்! பின் வருகின்ற நன்மையான தர்மம் தொடர்பான காரியங்களில் வஸிய்யத் செய்வது ஏற்றமாகும்.

1 ஏழைகளான உறவுகளுக்கு உதவுவது, அவர்களை ஆதரிப்பது.

2. தனது அசையும், அசையாத செல்வத்தில் சிலவற்றை, "ஸதகா ஜாரியா"வாக - தொடர்ந்து இருக்கக்கூடிய தர்மமாக வக்ஃஃபு செய்வது.

3) இஸ்லாமிய நலத் திட்டங்களைக் கட்டுவது. உ.ம். மஸ்ஜிதுகள், இஸ்லாமிய நிறுவனங்கள், கல்வி போதிக்கப்படும் மத்ரஸாக்கள்.

4) குர்ஆன் மற்றும் இஸ்லாமிய கல்வியை பிரசுரித்து வெளியிடுவது.

5) கிணறு வெட்டுவது, உள்ளூரிலும் வெளியூரிலும் தண்ணீர் தேவை உள்ளவர்களுக்கு தண்ணீரை சேர்ப்பிப்பது.

6) யதீம்களுக்கு (அனாதைகளுக்கு) பொறுப்பேற்பது, அவர்களின் கல்விக்காக செலவு செய்வது, அவர்களை கவனிப்பது, அவர்களுக்காக காப்பகங்களை நிறுவுவது.

7) குர்ஆனை மனனம் செய்வதற்கும் அதன் கல்விக் கூடங்களுக்கும் செலவு செய்வது.

8) இமாம்கள், கத்தீபுகள், அழைப்பாளர்கள் ஆகியோருக்கு பொறுப்பேற்பது, அழைப்புப் பணியின் திட்டங்களில் செலவு செய்வது.

9) ஏழைகள், வறியவர்கள், தேவையுள்ளவர்கள் ஆகியோருக்கு உணவளிப்பது, தர்மம் செய்வது.

10) ரமழானில் நோன்பாளிகளுக்கு இஃப்தார் ஏற்பாடு செய்வது.

11) பேரிடர்களில் சிக்கித் தவிப்பவர்களுக்கும் ஆபத்துகளில் அகப்பட்டுக் கொண்ட நல்லவர்களுக்கும் தர்மம் செய்வது.

12) கடனாளிகளின் கடனை நிறைவேற்றுவது.

---------------------------